Trust.O.P.No.61/2023 தேதி - 05.02.2025

ம.சா.1–சந்தனம் செட்டியார்

2, 3 எதிர்மனுதாரர்கள் தரப்பு குறுக்கு விசாரணை –

நான் ஆரம்பத்திலிருந்தே வத்திராயிருப்பில் தான் குடியிருக்கிறேன். எனக்கு 76 வயதாகிறது. இந்த வழக்கை எதற்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் வழக்கிடை சொத்து எங்கள் பாட்டன், பூட்டன் சொத்து என்பதன் அடிப்படையில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன், முன்னாள் எனது பாட்டன், பூட்டன் டிரஸ்டியாக இருந்தார்கள். ஒண்டிவீரப்பன் செட்டியார், சுப்பன் செட்டியார், சிவன் செட்டியார், சுப்பையா செட்டியார், வெள்ளையன் செட்டியார் ஆகியோர் டிரஸ்டியாக இருந்தார்கள். மேற்படி நபர்கள் டிரஸ்டியாக இருந்தார்கள் என்பதை காண்பிப்பதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். ம.சா.ஆ.1 ஆவணத்தின் அடிப்படையில் நான் அவ்வாறு சொல்கிறேன். ம.சா.ஆ.1 ஆவணத்தில் ஸ்ரீமான் வெங்கடாசல தேவர் என்பவரும் ஒரு டிரஸ்டியாக உள்ளார் என்றால் சரிதான். ம.சா.ஆ.1 ஆவணத்தில் தர்மத்தை பற்றி சொல்லப்பட்டுள்ளது, சொத்தை பற்றி சொல்லவில்லை. ம.சா.ஆ.1 ஆவணத்திற்கு பிறகு எங்களுடைய பாட்டன், பூட்டன்களோ, அவர்களது வாரிசுகளோ, அல்லது நானோ தர்மத்தை செய்து வந்ததற்கு எவ்வித ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ஸ்ரீமான் வெங்கடாசல தேவரும் அவரது பின் வாரிசுகளும் தான் நாளது தேதி வரை தர்மத்தை செய்து வருகிறார்கள் என்று சொன்னால் சரிதான், ஸ்ரீமான் வெங்கடாசல தேவருக்கு ஆண் வாரிசுகள் இல்லாததால் பெண் வாரிசுகள் தான் அனுபவித்து வருகிறார்கள், அது டிரஸ்ட் விதிக்கு புறம்பானது. ஸ்ரீமான் வெங்கடாசல தேவருக்கு ஆண் வாரிசுகள் இல்லாததால் பெண் வாரிசுகள் தான் அனுபவித்து வருவது தவறு என்று நடவடிக்கை எடுத்தோமா என்றால் வேறு வழியில் நடவடிக்கை எடுத்துள்ளோம், இப்போது தான் நீதிமன்றத்திற்கு வந்துள்ளோம்.

டிரஸ்டி என்பது சதுரகிரி மலைக்கு வரும் பக்தர்களுக்கு உணவு, தண்ணீர் வழங்குவதற்கு ஏற்படுத்தப்பட்ட அறக்கட்டளை என்றால் சரிதான். சொத்துக்கள் கோவிலுக்கோ, கோவில் தேவஸ்தானத்துக்கோ எழுதி வைக்கவில்லை என்றால் சரிதான். சொத்துக்களிலிருந்து வரும் வருமானத்திலிருந்து தர்மம் செய்ய வேண்டும் என்று உள்ளது என்றால் சரிதான். நானோ, எனது வாரிசுகளோ தர்ம காரியங்கள் தற்போது வரை செய்யவில்லை என்றால் சரிதான், நாங்கள் மைனாரிட்டி, ஸ்ரீமான் வெங்கடாசல தேவர் மெஜாரிட்டி, நாங்கள் உள்ளே நுழைய முடியவில்லை. நான் தர்ம காரியத்தை எந்த காலத்திலும் செய்யாதனாலும், தற்போது உள்ள தர்மகர்தா தர்ம காரியங்களை செய்து வருவதாலும், நான் இந்த வழக்கை தாக்கல் செய்ய உரிமை இல்லை என்றால் சரியல்ல.

<u>2, 3 எதிர்மனுதாரர்கள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறொரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.</u>